T. C - 036

012/DD/22

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## TRANSLATION TEST – SECOND PAPER – TRANSLATION OF NEWS PAPER REPORT IN TAMIL TO ENGLISH

(Without Books)

Maximum Time : 2.30 hours Maximum Marks : 100

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**தமிழிலிருந்து ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கவும்.**

(4 × 25 = 100)

1. Translate the following into English.

நான்சி என்ற பெண்ணுடன் மேலும் எட்டுப் பெண்கள் ஒரு மேஜையில் அமர்ந்தபடி வெள்ளைத் துணிகளில் ஏதோ செய்து கொண்டிருந்தார்கள். அந்தத் துணிகளின் ஓரங்களில் அவர்கள் முடிச்சுகள் போட்டுக் கொண்டிருந்தனர். அந்த எட்டு மனநிலை மனவளர்ச்சி குன்றிய பெண்களும் இந்தப் புதிய முயற்சியின் வாயிலாக ஆடைகளுக்கான புதிய வடிவமைப்பினைச் செய்து கொண்டிருந்தார்கள்.

கடந்த செப்டம்பர் மாதத்தில் சுங்கிடிச் சேலைகளுக்கு முடிச்சுகள் போடும் பயிற்சியை இவர்களுக்கு நாங்கள் வழங்கியதும் அவர்களது கைகள் வேகமாக முடிச்சுகளைப் போடத் தொடங்கிவிட்டன; இவர்களில் மூன்று பேர் இந்த வேலையில் மிகவும் தேர்ச்சி பெற்றவர்களாக அங்கீகரிக்கப்பட்டு விட்டார்கள்; அவர்கள் முடிச்சுப் போட்டு வழங்கிய சுங்குடித் துப்பட்டா விற்பனை செய்யப்பட்டு அவர்களுக்கு உரிய ஊதியமும் வழங்கப்பட்டு விட்டது என அந்த மறுவாழ்வு மையத்தின் பொறுப்பாளர் தெரிவித்தார்.

பொதுவாக மனவளர்ச்சி குன்றியோரை வைத்து மெழுகுத்திரி, ஊதுபத்தி, பப்படம் முதலானவை செய்யும் பணிகளை மட்டுமே மேற்கொள்வர். ஆனால் நாங்கள் மிகவும் நுட்பமான வேலைப்பாடு அமைந்த மதுரையில் பாரம்பரியமான இந்தச் சுங்கிடிச் சேலைகளுக்கு முடிச்சுப் போடும் பணியை இவர்களுக்கு வழங்கியுள்ளோம். இவர்களை இது கலைப் போராளிகளாக்கும் என நம்பிக்கையோடு தெரிவித்தார் அதன் பொறுப்பாளர்.

**[Turn over**

2. Translate the following into English.

சென்னையில் உள்ள மெட்ரோ இரயில்களில் விரைவில் மின்எண்ம முறையில் இரயில் செல்லும் இடம், செல்லும் வழி, இரயில் செல்லும் வேகம் முதலானவற்றைப் பயணிகளுக்குத் தெரிவிக்க இருக்கிறோம்.

சென்னையில் ஓடும் 45 கிலோ மீட்டர் தூர 42 மெட்ரோ இரயில்களில் முதல் கட்டமாக இந்த மின்எண்ம முறை நடைமுறைப் படுத்தப்படும். இதன் நீட்சியாக மேலும் பத்து வட சென்னை இரயில்களிலும் இது நடைமுறைப் படுத்தப்படும். இந்த முதல் மற்றும் இரண்டாம் கட்ட மின் எண்ம முறைப் பணியை ஃபிரெஞ்ச் ஆல்ஸ்டாம் நிறுவனம் செய்து வருகிறது.

இன்னும் இரண்டு மாதத்தில் இந்த மின் எண்ம முறைத் திட்டம் செயல்படுத்தப்படும் என மெட்ரோ இரயில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். தற்போது 42 மெட்ரோ இரயில்களில் நிலையங்கள் பற்றிய குறிப்பு மட்டுமே வழங்கப்படுகின்றன. இரண்டாம் கட்டமாக 10 இரயில்களும் இன்னும் ஓராண்டில் இணைக்கப்பட்டு விட்டால் இவ்வாறு இரயில் நிலையக் குறிப்பினை வழங்க இயலாது. எனவே, இந்த மின் எண்மத் திரைகளைப் பொருத்துதல் தேவையான ஒன்றாகிறது. 52 மெட்ரோ இரயில்களிலும் இந்த மின் எண்மத் திரைகளைப் பொருத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என அந்த அதிகாரி தெரிவித்தார்.

3. Translate the following into English.

சர்க்கரை ஆலைகளில் தேங்கிக் கிடக்கும் கச்சா சர்க்கரையை 2019ஆம் ஆண்டின் தொடக்கத்திற்குள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கும் இந்தோனேசியாவுக்கும் மலேசியாவுக்கும் ஏற்றுமதி செய்வதற்கும் இந்தியா ஏற்பாடு செய்து வருகிறது.

இந்தியாவிற்கும் சீனாவுக்கும் இடையே முதல் கட்டமாக 50,000 டன் சர்க்கரையை ஏற்றுமதி செய்வதற்கு இந்திய சர்க்கரை ஆலைகளின் கூட்டமைப்புக்கும் சீனப் பொதுத்துறை நிறுவனங்களுக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்து ஆனது என இந்திய அயல்நாட்டு வணிக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

பாரதப் பிரதமர் கடந்த ஏப்ரல் மாதத்தில் சீனாவுக்குச் சென்றிருந்த போது சீன அதிபருடனும் உயர்மட்டக் குழுவுடனும் நடைபெற்ற ஒப்பந்தப்படி இரண்டு மில்லியன் டன் சர்க்கரை ஏற்றுமதிக்கு ஒப்புதல் பெறப்பட்டது என அமைச்சக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சீனா இந்தியாவிடமிருந்து பாசுமதி அரிசிக்குப் பிறகு இரண்டாவதாகக் கச்சா சர்க்கரையை இறக்குமதி செய்கிறது எனவும் அந்த அதிகாரி தெரிவித்தார். சர்க்கரை ஏற்றுமதி தொடர்பாக இறுதி செய்வதற்காக இந்திய அதிகாரிகள் இந்தோனேசியாவிற்கும் மலேசியாவிற்கும் அடுத்த வாரம் செல்ல இருக்கிறார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

4. Translate the following into English.

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் கடந்த செவ்வாய்க் கிழமையன்று உலகத்திலேயே பெரிய ஸ்தூபியைப் பூனாவில், மகாராஷ்டிராத் தொழில் நுட்ப நிறுவன வளாகத்தில் உள்ள உலக அமைதிப் பல்கலைக்கழகத்தில் காந்தியடிகளின் 150ஆம் பிறந்த நாளை முன்னிட்டுத் திறந்து வைத்தார்.

உலக அமைதி இயக்கமாக விளங்கும் இந்த ஸ்தூபியை உருவாக்க 13 ஆண்டுகள் ஆனது என நிறுவனப் பொறுப்பாளர்கள் தெரிவித்தனர் 160 அடி விட்டத்தில் 263 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த ஸ்தூபி பரப்பளவில் வாட்டிகன் நகரத்தின் புனித பீட்டர் தேவாலயத்தை விடப் பெரியது என அவர்கள் தெரிவித்தனர்.

உலக அளவில் பெரிய இந்த ஸ்தூபியைத் திறந்து வைப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன் என்று துணைக் குடியரசுத் தலைவர் தெரிவித்தார். மகாராஷ்டிராத் தொழில் நுட்ப நிறுவனத்தில் அமைந்துள்ள உலக அமைதி நூலகத்திற்கும் உலக அமைதி வழிபாட்டுக் கூடத்திற்கும் மேல் இந்த ஸ்தூபி அமைக்கப்பட்டுள்ளது.

63 அடி உயர 24 மிகப் பெரிய தூண்டுகள் இந்த ஸ்தூபியைத் தாங்கி நிற்கின்றன. இங்குள்ள வழிபாட்டுக் கூடத்தில் ஒரே நேரத்தில் 3,500 பேர் வழிபாடு செய்யலாம். உலக அளவில் புகழ்பெற்ற 50 மகான்களின் திருவுருவப் படங்கள் இந்த வழிபாட்டுக் கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன.